## கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 13.03.2026 அன்று கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.



● திராவிட மாடல் அரசு சார்பில், சேலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் நிலை குறித்து, அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.



● தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த இளைஞர் அணிச் செயலாளருக்கு கழகத்தினரும் பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



● ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளர் மறைந்த சின்னச்சாமி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மரியாதை செய்தார்.





● தருமபுரி கிழக்கு – மேற்கு கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட, சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.







● தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில் 29,000 பயனாளிகளுக்கு, ரூ.255 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன். ரூ.15.39 கோடி மதிப்பிலான 33 நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்து, ரூ.33.96 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்.



● கிருஷ்ணகிரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த இளைஞர் அணிச் செயலாளருக்கு கழகத்தினரும் பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.





● கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அரசு விழாவில் 10,709 பயனாளிகளுக்கு ரூ.326.93 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.41.51 கோடி மதிப்பில் முடிவடைந்த திட்ட பணிகளைத் தொடங்கி வைத்து ரூ.147.92 கோடி மதிப்பிலான 709 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சிறப்புரையாற்றினார்..



● கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதாப் – பையூர் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.





● கிருஷ்ணகிரி கிழக்கு – மேற்கு கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட, சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.